


22. 12. 2025

தலைப்புச் செய்திகள்

- இந்தியா - நியூசிலாந்து நாடுகளுக்கிடையிலான தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தால் இரு மடங்கு வர்த்தகம் அதிகரிக்கும் என்று பிரதமர் திரு. நரேந்திரமோடி மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.
- கல்வி, ராணுவ தொழில்நுட்ப பிரிவுகளில் இணைந்து செயலாற்ற பாதுகாப்பு ஆராய்ச்சி மேம்பாட்டு அமைப்பும், தேசிய பாதுகாப்பு பல்கலைகழகமும் புதிய ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.
- தமிழ்நாட்டில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள செவிலியர்களின் கோரிக்கைகள் பரிசீலிக்கப்பட்டு விரைவில் தீர்வு எட்டப்படும் என்று மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.
- திமுகவிற்கு எதிராக ஒத்த கருத்துடைய கட்சிகளுடன் கூட்டணி அமைக்கப்படும் என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு.எடப்பாடி கே.பழனிச்சாமி கூறியுள்ளார்.

- கணிதமேதை ஸ்ரீனிவாச ராமானுஜத்தின் பிறந்த நாள் தேசிய கணித தினமாக இன்று கொண்டாடப்படுகிறது.

இனி விரிவான செய்திகள்

**************

பிரதமர்

இந்தியா நியூசிலாந்து நாடுகளுக்கிடையே பரஸ்பரம் பயனளிக்கும், வரலாற்று சிறப்புமிக்க தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தால் அடுத்த ஐந்தாண்டுகளில் இரு நாடுகளுக்கிடையிலான இரு தரப்பு வர்த்தகம் இரு மடங்காக அதிகரிக்கும் என்று பிரதமர் திரு.நரேந்திரமோடி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இந்தியா நியூசிலாந்து நாடுகளுக்கிடையிலான நட்புறவு புதிய உச்சங்களை எட்டும் என்று தமது சமூக வலைதள பதிவில் எடுத்துரைத்த பிரதமர் இதன்மூலம் நம் நாட்டில் 20 பில்லியன் டாலருக்கும் அதிகமான முதலீடுகளை பல்வேறு துறைகளில் நியூசிலாந்து மேற்கொள்ள இருப்பதாகவும் மகிழ்ச்சி தெரிவித்தார்.

இதனால் நம் நாட்டில் உள்ள திறன்மிகு இளைஞர்கள் பயன்பெறுவதோடு, எழுச்சி மிகு ஸ்டார்ட் அப் சூழல் மற்றும் பொருளாதார சீர்திருத்தங்களால் புதிய கண்டுபிடிப்புகளுக்கு ஒரு வலுவான அடித்தளம் அமையும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தியா – நியூசிலாந்து இடையே விளையாட்டு, கல்வி, கலாச்சார பரிவர்த்தனையில் உள்ளதுபோல, இரு

நாடுகளுக்கிடையிலான நட்புறவு தொடர்ந்து வலுப்பெறும் என்றும் குறிப்பிட்டார்.

முன்னதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி, நியூசிலாந்து பிரதமர் திரு. கிறிஸ்டோபர் லக்ஸனுடன் மேற்கொண்ட தொலைபேசி பேச்சுவார்த்தைகளை அடுத்து, தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் வெற்றிகரமாக நிறைவேறியதாக பெருமிதம் தெரிவித்தார்.

கடந்த மார்ச் மாதம் திரு.லக்ஸனின் இந்திய வருகையின்போது, தொடங்கிய இதற்கான பேச்சுவார்த்தைகள் 9 மாதங்களுக்குள் சாதனை அளவாக நிறைவடைந்தது குறிப்பிடத்தக்கது.

**************

பியூஷ்கோயல்

புவி அரசியலில் இந்தியாவின் முக்கியத்துவத்தை இந்த தடையற்ற வர்த்தகம் பிரதிபலிப்பதாக மத்திய வர்த்தக தொழில்துறை அமைச்சர் திரு.பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

இந்த ஒப்பந்தத்தை மகளிர் முன்னெடுத்து சென்றதாகவும், இந்த ஒப்பந்தத்தை நிறைவேற்றியமைக்காக அவர்களுக்கு நன்றி தெரிவிப்பதாக கூறினார்.

**************

ஒப்பந்தம்

நாட்டில் ஆராய்ச்சி, கல்வி, பயிற்சி, ராணுவ தொழில்நுட்ப உதவி, உள்நாட்டு பாதுகாப்பு பிரிவுகளில் இணைந்து செயலாற்ற பாதுகாப்பு மேம்பாட்டு ஆராய்ச்சி அமைப்பும்,

தேசிய பாதுகாப்பு பல்கலைகழகமும் புதிய ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.

பாதுகாப்பு துறையில் சுய சார்பு வலுப்பெறுவதுடன் தற்சார்பு பாரதத்திற்கான தொலைநோக்கு பார்வையை முன்னெடுத்து செல்ல இதுவகை செய்கிறது.

ஒருங்கிணைந்த தொழில்நுட்பம், அறிவுதிறன், செயல்பாடுகள் மூலம் தேசிய பாதுகாப்பிற்பான தயார்நிலையை உறுதி செய்ய இதன்மூலம் வழிகோலப்பட்டுள்ளது.

பாதுகாப்பு படையினருக்கான திறன்மேம்பாட்டு திட்டங்கள், ஆராய்ச்சி மேம்பாட்டு திட்டங்கள், சிறப்பு பயிற்சிகளுக்கும் இது வகை செய்கிறது.

பாதுகாப்பு ஆராய்ச்சி அமைப்பு தயாரிக்கும் பல்வேறு பாதுகாப்பு கருவிகள், மத்திய ஆயுதப்படை உட்பட உள்துறை அமைச்சகத்தின் பல்வேறு முகமைகளில் இணைக்கவும் இந்த ஒப்பந்தம் வழிகோலுகிறது.

**************

முதலமைச்சர்

தமிழ்நாட்டில் காவல், தீயணைப்பு மீட்பு பணிகள், பள்ளி கல்வி துறைகளின் சார்பில் 274 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய கட்டிடங்களை சென்னை தலைமை செயலகத்திலிருந்து முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் இன்று திறந்துவைத்துள்ளார்.

இதன்படி 9 புதிய காவல் நிலையங்கள்,

உத்திரமேரூர், வேளாங்கண்ணி, பள்ளிபாளையத்தில் 3 காவல் உட்கோட்டங்கள்,

20 மாவட்டங்களில் வகுப்பறை, ஆய்வக கட்டிடங்கள்,

கடலூர், விழுப்புரம் மாவட்டங்களில் இரண்டு மாதிரி பள்ளி, விடுதி கட்டிடங்கள்,

திருச்சி, தஞ்சை நாகை, மயிலாடுதுறை, மாவட்டங்களில் நூலக கட்டிடங்கள் உள்ளிட்டவை இதில் அடங்கும்.

திருச்சி மாவட்டத்தில் மத்திய அரசின் நிதி உதவியுடன் தலா 22 லட்ச ரூபாய் செலவில் 9 நூலகங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளதாக மாவட்ட நூலக அலுவலர் திரு.சரவண குமார் எமது செய்திப்பிரிவிடம் தெரிவித்தார்.

வாய்ஸ்

**************

உதயநிதி

தமிழ்நாட்டில் திமுக தலைமையிலான அரசு அனைத்து தரப்பினருக்கும் துணை நிற்க கூடிய வகையில் செயலாற்றி வருவதாக துணை முதலமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னை துறைமுகம் பகுதியில் கிறிஸ்துமஸ் விழா நிகழ்ச்சியில் பல்வேறு நல திட்ட உதவிகளை இன்று வழங்கி பேசிய அவர், சிறுபான்மையினர் நலனுக்காக மாநில அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக குறிப்பிட்டார்.

தொடர்ந்து சென்னை மெரினா கடற்கரை பகுதியில் வீடற்றோருக்கான புதிய இரவு நேர காப்பகத்தையும் அவர் திறந்துவைத்தார்.

100 பேர் தங்கும் வகையில் 86 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் அடிப்படை வசதிகளுடன் இந்த காப்பகம் அமைக்கப்பட்டுள்ளது.

**************

சுப்பிரமணியன்

தமிழகத்தில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள செவிலியர்களின் கோரிக்கைகள் விரைவில் பரிசீலிக்கப்பட்டு தீர்வு காணப்படும் என்று மாநில மருத்துவம் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

சென்னை கிண்டி எம்.ஜி.ஆர் பல்கலைகழகத்தில் போராட்ட குழுவினருடன் இன்று பேச்சுவார்த்தை மேற்கொண்ட பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர், காலிப்பணியிடங்களின் அடிப்படையில் செவிலியர்களுக்கான பணி நிரந்தரம் செய்யப்படும் என்றார்.

இதுவரை மாநிலத்தில் காலிப்பணியிடங்களின் அடிப்படையில் மூன்றாயிரத்து 614 தொகுப்பூதிய செவிலியர்கள் பணிநிரந்தரம் செய்யப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

தொகுப்பூதியம் பெறும் செவிலியர்களுக்கும் மகப்பெறு விடுப்பு வழங்குவது குறித்து விரைவில் முடிவெடுக்கப்படும் என்றும் கூறினார்.

**************

அமைச்சர்கள் குழு

தமிழ்நாட்டில் அரசு ஊழியர்கள், ஆசிரியர் சங்கங்களின் பல்வேறு கோரிக்கைகள் குறித்து அமைச்சர் குழுவினர், ஊழியர் சங்கத்தினருடன் சென்னை தலைமை செயலகத்தில் இன்று பேச்சுவார்த்தை மேற்கொண்டனர்.

அமைச்சர்கள் திரு.எ.வ.வேலு, திரு.அன்பில் மகேஷ் பொய்யாமொழி, திரு.தங்கம் தென்னரசு உள்ளிட்டோர் இதில் பங்கேற்றனர்.

**************

எடப்பாடி

தமிழ்நாட்டில் திமுக ஆட்சியை அகற்றும் வகையில் ஒத்த கருத்துடைய கட்சிகளுடன் கூட்டணி அமைக்கப்படும் என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு.எடப்பாடி கே.பழனிச்சாமி தெரிவித்துள்ளார்.

சேலம் மாவட்டம் எடப்பாடியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், அஇஅதிமுக ஆட்சியில் தொடர்ந்து பொங்கல் தொகுப்பு வழங்கப்பட்டது போல, மாநில அரசும் திட்டமிட்டு அதனை வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

ஒப்பந்த அடிப்படையில் தேர்வு செய்துள்ள செவிலியரை பணிநிரந்தரம் செய்ய வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

திமுக தேர்தல் அறிக்கையில் கூறியதை இதுவரை நிறைவேற்ற வில்லை என்று குறை கூறிய அவர், கோவிட்

காலத்தில் அரசுக்கு வரவேண்டிய வரிவருவாய் வராதபோதிலும், அஇஅதிமுக சிறப்பாக ஆட்சி புரிந்ததாக குறிப்பிட்டார்.

விரைவில் அஇஅதிமுகவின் தேர்தல் அறிக்கை வெளியிடப்படும் என்றும் அவர் கூறினார்.

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த பணியில் எந்த குறைபாடும் இல்லை என்றும், அனைத்து கட்சிக்கும் அது பொதுவானது என்றும் குறிப்பிட்டார்.

ரயில் கட்டண உயர்வை மத்திய அரசு பரிசீலிக்க வேண்டும் என்றும் திரு.எடப்பாடி கே.பழனிச்சாமி கேட்டுக்கொண்டார்.

**************

தேசிய கணித தினம்

கணிதமேதை சீனிவாச ராமானுஜத்தின் பிறந்த தினம் தேசிய கணித தினமாக இன்று கொண்டாடப்படுகிறது.

தமிழகத்தை சேர்ந்த கணிதமேதை ராமானுஜம் கணிதத்தில் கண்டறிந்த புதிய கோட்பாடுகள் பலவும் அனைவரையும் வியப்பூட்டியதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் டாக்டர் எல்.முருகன் கூறியுள்ளார்.

தமது கணித கண்டுபிடிப்புகளால் என்றென்றும் போற்றக்கூடியவராக திகழும் அவரை வணங்குவதாக குறிப்பிட்டுள்ளார்.

இந்நாளை ஒட்டி அமெரிக்காவை சேர்ந்த கணித நிபுணர் டாக்டர் அலெக்ஸாண்டர் ஸ்மித்திற்கு ஸ்ரீனிவாச ராமானுஜம்

விருதை கும்பகோணம் சாஸ்த்ரா பல்கலைகழகம் வழங்கி கவுரவித்துள்ளது.

**************

பொருநை

நெல்லை பொருநை அருங்காட்சியகத்தை பொதுமக்கள் நாளைமுதல் பார்வையிட அனுமதிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

**************

நீலகிரி

நீலகிரி மாவட்டம் குன்னூர் பைக்காரா நீர்வீழ்ச்சி சூழல் சுற்றுலா தளத்தில் பராமரிப்பு பணிகள் நிறைவடைந்ததை அடுத்து இன்றுமுதல் சுற்றுலா பயணிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இம்மாவட்டத்தில் ஸ்ரீஹெத்தை அம்மன் திருவிழா அடுத்த மாதம் 7ஆம் தேதி கொண்டாடப்படுவதை ஒட்டி அன்றைய தினம் மாவட்டத்திற்கு உள்ளூர் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

சீர்காழி மேலச்சாலை அன்னை அஜ்மத் பீவி தர்காவின் 85ஆவது ஆண்டு சந்தனக்கூடு கந்தூரி விழா கொடியேற்றம் இன்று வெகு விமரிசையாக நடைபெற்றது.

முக்கிய நிகழ்வான சந்தனக்கூடு வைபவம் வரும் 27ஆம் தேதி நடைபெறும்.

**************

இருவரி

அரியலூரில் இன்று நடைபெற்ற தமிழ் ஆட்சிமொழி குறித்த விழிப்புணர்வு பேரணியில் ஏராளமான பள்ளி கல்லூரி மாணாக்கர் விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய பதாகைகளுடன் பங்கேற்றனர்.

திருவாரூரில் மத நல்லிணக்கத்திற்கு எடுத்துக்காட்டாக இன்று நடைபெற்ற கிறிஸ்துமஸ் தாத்தா பேரணியில் ஏராளமானோர் பங்கேற்றனர்.

ராணிப்பேட்டை மாவட்டம் பல்லூர் சுங்கச்சாவடி அருகே காவல்துறையினர் மேற்கொண்ட வாகன தணிக்கையில் அரசால் தடை செய்யப்பட்ட 492 புகையிலை பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

இதுதொடர்பாக இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவில் ரோப் கார் சேவை, பராமரிப்பு பணிகள் காரணமாக இன்று ஒருநாள் ரத்து செய்யப்பட்டுள்ளது.

**************

கிரிக்கெட்

இந்திய - இலங்கை மகளிர் அணிகளுக்கிடையிலான 2 ஆவது 20-20 கிரிக்கெட் போட்டி விசாகப்பட்டினத்தில் நாளை நடைபெறுகிறது.

5 போட்டிகள் கொண்ட இத்தொடரில் இந்தியா தற்போது 1-0 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது.

**************

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது